
# திராவிடத்தால் வாழ்கிறோம்

954

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

137

## மீனவர்களுக்கு ஊக்கத் தொகை

இந்தத் திட்டத்தின் கீழ், 2024 ஆகஸ்ட் 14ஆம் தேதி, சென்னை காசிமேட்டில் 'கைவிடப்பட்ட மீன்பிடி வலை சேகரிப்பு மையத்தைத்' தொடங்கி வைத்திருந்தார் முதலமைச்சர். இந்த மையத்தின் மூலம், மீனவர்களின் பங்கேற்புடன் கடலில் கைவிடப்படும் வலைகள் சேகரிக்கப்பட்டு, மறுசுழற்சிக்குக் கொண்டுவரப்பட்டன.

இதுவரை, 17,044 கிலோவுக்கும் அதிகமான கைவிடப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள், கடலுக்குள் செல்லாமல் தடுக்கப்பட்டுள்ளது. 10,700 கிலோ கைவிடப்பட்ட மீன்பிடி வலைகள், மறுசுழற்சி செய்யப் பட்டுள்ளன.

சென்னை, காசிமேட்டில் தொடங்கி வைக்கப்பட்ட மையம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் நிலையில், தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களிலும் இந்த மையத்தைச் செயல்படுத்தத் திட்டமிட்டது அரசு. கடந்த ஜூன் 5 -ஆம் தேதியன்று, நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலகச் சுற்றுச்சூழல் தின விழாவில், இந்த மையங்களைத் தொடங்கி வைத்தார் நம் முதலமைச்சர்.




# தமிழ்நாடு மீன்வலை முயற்சிகள் திட்டம்!

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

சூழலியல் பாதுகாப்பு என்பது மனிதர்களுக்கு மட்டும் அவசியமானது அல்ல, அது அனைத்து உயிர்களுக்கும், பூகோள உயிர்சூழலுக்கும் பொதுவானது என்பதையறிந்த அரசு, நம் திராவிட மாடல் அரசு. அதனால்தான், 2021-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே, பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்த்துப் போராடும் சிறு முயற்சியாக 'மீண்டும் மஞ்சப்பை' இயக் கத்தைத் தொடங்கி வைத்தார் நம் முதலமைச்சர். அதன்பின்னர், இந்தியா விலேயே வேறு எந்த மாநிலமும் முன்னெடுக்காத நிலையில், காலநிலை மாற்றத்துக்கான இயக்கத்தை முன்னெடுத்து வருகிறது தமிழ்நாடு அரசு.



காலநிலை மாற்றத்தினை பொதுவான பிரச்சனையாகக் கருதாமல், அதற்குத் தனித் துறையையே உருவாக்கியது நம் அரசுதான். அந்த வரிசையில், உலக வங்கியின் உதவியுடன் 'தமிழ்நாடு கடல்சார் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ், தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ள புதுமைத் திட்டம்தான் 'தமிழ்நாடு மீன்வலை முயற்சிகள்' என்ற திட்டம்.

தமிழ்நாட்டின் கடலோரங்களில், கடலில் கைவிடப்படும் மீன்வலைகள் மற்றும் நெகிழிக் கழிவுகள் ஆகியவை, கடல் உயிர்வளம் மற்றும் கடல்சார் சூழலுக்கு மிகுந்த அச்சுறுத்த லாக மாறி வருகின்றன. இந்த நிலையில், கடலில் கைவிடப்படும் மீன்வலைகளைச் சேகரித்து, மீனவர்களின் பங்கேற்புடன் அவற்றை மறுசுழற்சி செய்வதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம். சூழலியல் நோக்கில் இப்படியான திட்டத்தைச் செயல்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடுதான்.

## சூழலியல் நீதிக்கான அரசு!

### 14 மாவட்டங்கள்

திருவள்ளூர் மாவட்டம் – பழவேற்காடு கிராமம், சென்னை மாவட்டம் – பட்டினப்பாக்கம் கலங்கரை விளக்கம் அருகில், செங்கல்பட்டு மாவட்டம் – கோவளம், விழுப்புரம் மாவட்டம் –கூனிமேடு கிராமம், கடலூர் மாவட்டம் – முடசல் ஓடை மீன்பிடி நிலையம், மயிலாடுதுறை மாவட்டம் – பழையார் மீன்பிடி துறைமுகம், நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகம், திருவாரூர் மாவட்டம் – முத்துபேட்டை, தஞ்சாவூர் மாவட்டம் – மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுக வளாகம், புதுக்கோட்டை மாவட்டம் – கோட்டைப்பட்டினம் மீன்பிடி நிலைய வளாகம், ராமநாதபுரம் மாவட்டம் – ஏர்வாடி கிராமம், தூத்துக்குடி மாவட்டம் – தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம், திருநெல்வேலி மாவட்டம் – உவரி கடற்கரையில் ஏல மண்டபம், கன்னியாகுமரி மாவட்டம் – சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் ஆகிய 14 கடலோர மாவட்டங்களில் 'கைவிடப்பட்ட மீன்பிடி வலை சேகரிப்பு மையம்' செயல்படுகிறது.

மீனவர்கள் சேகரிக்கும் ஒவ்வொரு கைவிடப்பட்ட மீன்வலைக்கும், கிலோவுக்கு ரூ.40 முதல் ரூ.46 வரை வழங்கப்படுகிறது. இதில் ரூ.4 முதல் ரூ.6 வரை ஊக்கத்தொகையும் அடங்கும். இதன்மூலம், மீனவர்களுக்கு கூடுதல் வருமான வாய்ப்பும் கிடைத்துள்ளது.

> “நம்முடைய அரசு, சமூக நீதிக்கான அரசு மட்டுமல்ல; சூழலியல் நீதிக்கான அரசாகவும் இருக்கும்.”




இந்த மையங்கள் மீனவர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. கடலில் கைவிடப்படும் மீன்வலைகள், கடல்சார் நெகிழிகள் சேகரிக்கப்படுவதால், கடல் பல்லுயிரியம் பாதுகாக்கப்படுகிறது.

குப்பை என நினைக்கும் பல பொருட்கள், பிற உயிர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன என்ற சூழல்சார் நோக்கில் விழிப்புணர்வு பெற வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். வனப் பகுதிகளில் நெகிழிக் கழிவுகளுக்குக் கட்டுப்பாடு கள் இருப்பதைப்போல, கடல்சார் விழிப்புணர்வில் இந்தப் பயன்படுத்தப் பட்ட மீன்வலை சேகரிப்பு மையங்கள் நிச்சயம் அமையும்.

சென்னை, நந்தம்பாக்கத்தில் 14 மையங்களையும் தொடங்கி வைத்து உரையாற்றிய முதலமைச்சர் “இந்தியா, ஏன் அமெரிக்கா போன்று இல்லை, ஜப்பான் போன்று இல்லை, ஐரோப்பா போன்று இல்லை” என்று நிறைய சினிமாவில் கேள்வி கேட்பார்கள். அதுபோன்று ஆகவேண்டும் என்றால், அந்த மக்களுக்கு இருக்கக் கூடிய சுயஒழுக்கம் நமக்கும் இருக்கவேண்டாமா? அதற்கான முதல்படிதான் இதுபோன்ற முயற்சிகள். நம்முடைய அரசு, சமூக நீதிக்கான அரசு மட்டுமல்ல; சூழலியல் நீதிக்கான அரசாகவும் இருக்கும். அதற்கு மக்களாகிய நீங்கள் துணை நிற்க வேண்டும்” எனக் கேட்டுக் கொண்டார். சூழலியல் நீதிக்கான அரசு நீடிக்கட்டும்!

...சாதனை தொடரும்

## அறிவியலுக்குப் புறம்பாக மாடுகள் மாநாடு!

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் செப்டம்பர் 4 முதல் 7 வரை நான்கு நாட்களுக்கு 'கௌ மகா கும்ப்' என்ற பெயரில், பசுமாடுகளுக்கான உலக மாநாடும் கண்காட்சியும் நடைபெற்றுள்ளன. கண்காட்சியில் இடம்பெற்ற பல ஸ்டால்களில் பசுவின் சிறுநீர் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்தது. இதய நோய், மூட்டு வலி, சளி, இருமல், காய்ச்சல், ஆஸ்துமா, புற்றுநோய் எனப் பல விதமான நோய்களை, பசுவின் சிறுநீர் குணப்படுத்துகிறது என்று, அறிவியலுக்குப் புறம்பாக விளம்பரப்படுத்தியுள்ளனர்.

எல்லா அரங்குகளிலும் பசுவின் சாணத்தையும் வித விதமாக காட்சிப்படுத்தியிருந்தனர். குறிப்பாக, 'வேதிக் பெயிண்ட்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான ஸ்டாலில் கான்கிரீட்டுக்கு மாற்று 'கௌகிரீட்' என்று மாட்டுச் சாணத்தை விளம்பரப்படுத்தியது. இதன் உறுதித்தன்மை, கட்டுமானத்தின் பாதுகாப்பு குறித்தெல்லாம் எந்த ஆய்வறிக்கையும் கிடையாது.

சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதாகி, சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் அஷ்ரம் பாபுவின் படத்தைப் பெரிய அளவில் தொங்கவிட்டபடி, ஒரு ஸ்டால் அமைக்கப் பட்டிருந்ததும் அதிர்ச்சி தரக்கூடிய ஒன்று.

'தேவ்ரஹா பாபா கௌ சேவா பரிவார்' என்ற இந்துத்துவ அமைப்பால் இந்த மாநாடு நடத்தப்பட்டுள்ளது. மாநாட்டு அரங்கில் நடைபெற்ற கருத்தரங்குகளில், நவீன அறிவியலைக் கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளனர். இந்த 4 நாள் மாநாட்டில் பா.ஜ.க. தலைவர்கள், ராஜஸ்தான் மாநில அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர். பசுவின் சிறுநீர் மற்றும் கோமியத்தில் 14 வகையான தீங்கு விளைவிக்கக்கூடிய பாக்டீரியாக்கள் உள்ளன என்று, 'இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம்' மிகத் தெளிவாக கூறியிருக்கிறது. ஆனால், மீண்டும் மீண்டும் இந்துத்துவா அமைப்புகள் மாடுகளைப் புனிதப்படுத்து வதற்காக மனிதர்களை முட்டாளாக்கும் செயலை செய்துகொண்டே இருக்கின்றன என இந்த மாநாட்டை கண்டித்து, சமூக வலைதளங்களில் கடும் விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரை வரவேற்றேன்! தலையே கிரீடமானது!



இந்திரஜித்

1985-ஆம் ஆண்டு, எனது சகோதரர் கழக முன்னோடி செய்யாறு பாபு ஜனார்த்தனம் அவர்கள், ஏற்பாடு செய்திருந்த கழக நிதியளிப்புப் பொதுக்கூட்டத்தில், ஒப்பற்ற தலைவரை வரவேற்கும் வரலாற்று வாய்ப்பு அமைந்தது. அப்போது, ஆகாயத்தில் மிதந்தேன். தலையே கீரிடமானதுபோல உணர்ந்தேன். அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் துண்டு போர்த்திப் பாராட்டினார்.

– இந்திரஜித், துணை அமைப்பாளர்,
கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை,
சென்னை கிழக்கு மாவட்டம்

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கழகப் பொதுக்குழுக் கூட்டம்!

1961-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 23-ஆம் தேதி, தூத்துக்குடியில் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தப் பொதுக்குழுவில், காங்கோ நாட்டு விடுதலை வீரரும் அந்த நாட்டுப் பிரதமருமான பெட்ரீஸ் லுமும்பா அவர்களின் படுகொலைக்கு, பலமான கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆழ்ந்த அனுதாபமும், படுகொலைக்கு ஆளான அந்த மாவீரனுக்கு வீர வணக்கத்தையும் பொதுக்குழு தெரிவித்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.